Register No. | | | | | | | | |

**TA5A** **6274–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Law comes to the assistance of the vigilant, not to the sleepy. Explain.

   சட்டம் விழிப்புடையவருக்குத்தான் துணை செய்யும், உறங்குபவருக்கல்ல. விவரிக்கவும்.

2. What are the circumstances under which a second appeal lies to the High Court?

   எந்தச் சூழ்நிலைகளில் உயர்நீதிமன்றத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படலாம்?

3. Explain the essential requisites of pleadings and describe the manner of amending the pleadings.

   வாதுரைகளின் முக்கிய தேவைகளைப் பற்றி விளக்குக, மற்றும் வாதுரைகளைத் திருத்துவது குறித்த வழிமுறையை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain what is meant by suits of a civil nature. Give illustrations.

   உரிமையியல் தன்மை கொண்ட வழக்குகள் என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

5. State the rules relating to the place of suing under the Civil Procedure Code, 1908.

   1908-ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடர வேண்டிய இடம் பற்றிய விதிகளைக் கூறுக.

6. What is Foreign Judgment? Under what circumstances it can be enforced by Indian Courts?

அயல்நாட்டுத் தீர்ப்பு என்றால் என்ன? எச்சூழ்நிலைகளில் அவை இந்திய நீதிமன்றங்களால் நிறைவேற்றப்படலாம்?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Attachment before Judgment.

தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்தல்.

(b) Garnishee order.

பொருள் பற்றுகை கட்டளை.

(c) Condoning the Delay.

காலதாமதத்தினை மன்னித்தல்.

(d) Review.

மறு ஆய்வு.

(e) Interpleader Suit.

இடைப்பாத்திய வழக்கு.

(f) Cross objections.

குறுக்கு ஆட்சேபணைகள்.

(g) Cause of Action.

வழக்குக்கான காரணம் (அல்லது) வழக்கு மூலம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Aravind sues Somu for possession of property as an owner basing his claim on title. The suit is dismissed. Again Aravind sues Somu for possession of the same property on the ground of adverse possession. Can he do so? Discuss.

அரவிந்த் என்பவர் சோமு அவர்களுக்கு எதிராக சட்டப்பூர்வமான பாத்தியதையின் அடிப்படையில் சொத்தின் மீது தனக்கு உள்ள உரிமையை விளம்பக் கோரி வழக்குத் தொடர்ந்தார். ஆனால், நீதிமன்றம் அரவிந்திற்கு சொத்தின் மீது எவ்வித உரிமையும் இல்லை என்று கூறி வழக்கினை தள்ளுபடி செய்துவிட்டது. அதன்பின் மீண்டும் அரவிந்த் அதே வழக்குமூலத்தை கொண்டு, தனக்குச் சொத்தின் மீது எதிரனுபோகம் உள்ளது என்பதின் அடிப்படையில் வழக்கினை சோமு அவர்களுக்கு எதிராக வழக்கினை தொடுத்தார். அவர் அவ்வாறு செய்ய முடியுமா? விவாதிக்கவும்.

9. Ajith keeps his horses and wagons standing for an unreasonable time in the highway. State what relief can be sought against him under C.P.C.

அஜித் என்பவர் தனக்குச் சொந்தமான குதிரைகளையும் வாகனங்களையும் நெடுஞ்சாலையில் தேவையில்லாமல் நீண்ட நேரம் நிறுத்தி வைத்துள்ளார். அவருக்கு எதிராக உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர இயலுமா?

10. A suit was filed by Ajay against Vijay for the recovery of money. On the date of hearing of the case, both the parties to the dispute failed to appear before the court. The court dismissed the suit. Now Ajay wants to file an application to set aside the dismissal order. Can the court entertain his application?

அஜய் என்பவர் தனக்கு விஜய் என்பவர் பணம் தர வேண்டும் என வழக்கிடுகிறார். வழக்கு விசாரணைத் தேதியில் தரப்பினர் இருவரும் ஆஜராகாததால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து விடுகிறது. இப்பொழுது அஜய் நீதிமன்றம் போட்ட தள்ளுபடி உத்தரவை இரத்து செய்யக் கோரி மனுத் தாக்கல் செய்ய ஆசைப்படுகிறார். நீதிமன்றம் அந்த மனுவை ஏற்றுக் கொள்ளுமா?

---

Register No. | | | | | | | | |

**TA5C** **6275–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Trace the evolution of Environmental Jurisprudence through the decisions of the Supreme Court.

 உச்ச நீதிமன்றத்தின் தீர்வுகள் மூலமாக சுற்றுப்புறச்சூழல் சட்டவியலின் பரிணாம வளர்ச்சி குறித்து ஆராய்க.

2. Examine the constitution, powers and functions of the Central Pollution Control Board under the Air Act, 1981.

 1981-ஆம் ஆண்டு காற்றுச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அமைப்பு அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆராய்க.

3. State the object of the Wild Life Protection Act and explain the rules related to trade or commerce in wild animals, animal articles and trophies.

 வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கத்தை விவரித்து வனவிலங்குகள், விலங்குகளின் பொருட்கள் மற்றும் கேடயங்கள் தொடர்பான தொழில் மற்றும் வணிகம் சார்ந்த விதிகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Polluter Pays Principle" is an essential feature of Sustainable Development – Comment.

 "மாசுக்கேடு விளைவிப்பவரே இழப்பீடு செலுத்தும்" கோட்பாடு நீடித்த வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது – விமர்சிக்க.

5. Discuss the important International Instruments providing for the protection of environment.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கான முக்கியமான சர்வதேச சட்டங்களை விவாதிக்கவும்.

6. Discuss the recent guidelines relating to Environmental Impact Assessment.

சுற்றுச்சூழலின் செயல் தாக்க மதிப்பீடு குறித்து அமலிலுள்ள வழி முறைகளை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Biomedical Waste.

உயிரியல் மருத்துவக் கழிவு.

(b) Carbon footprint.

கரியமில தடம்.

(c) Eco – tourism.

சூழல் – சுற்றுலா.

(d) Performing Animals.

கேளிக்கைக்குரிய விலங்குகள்.

(e) Local Biodiversity Fund.

உள்ளூர் பல்லுயிர் பாதுகாப்பு நிதியம்.

(f) Kamalnath Case.

கமல்நாத் வழக்கு.

(g) National Green Tribunal.

தேசீய பசுமை தீர்ப்பாயம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A case was filed against the State Government's act of diverting eco-fragile areas to commercial project activities without receiving clearance under environmental laws violating the wildlife, forest and peoples right – Decide.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் உரிய பாதுகாப்பு அனுமதி பெறாமல் சூழல் பலவீனமான பகுதிகளை திட்ட செயல்பாடுகளுக்கு மாநில அரசு இடங்களை ஒதுக்கீடு செய்தது. இச்செயல் வன உயிரியியல், காடுகள் மற்றும் மனித உரிமைகளை பறிப்பதாக உள்ளது என்று வழக்கிடப்பட்டது – தீர்மானிக்க.

9. 'Jallikattu' and bullock cart races is organised in a state. A case was filed on the ground that it is unconstitutional for taming of the bulls; as it amounts to cruelty – Decide.

   ஜல்லிக்கட்டு மற்றும் மாட்டு வண்டி பந்தயம் மாநிலம் ஒன்றில் நடைபெற்றது. இந்நிகழ்வு வாயிலாக காளைகளை அடக்குவது இரக்கமற்ற செயல் எனவும், அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது எனவும் வழக்கிடப்பட்டது – தீர்மானிக்க.

10. A Welfare Association filed a petition before the District Magistrate against the corporation to take necessary action to stop the stench caused by open drain. The Municipality pleaded want of funds – Decide.

    ஒரு நல சங்கம் தங்கள் பகுதியில் திறந்த சாக்கடையால் துர்நாற்றம் வீசுவதை அகற்றக் கோரி மாநகராட்சிக்கு எதிராக மாவட்ட நடுவரிடம் மனு ஒன்றினைச் சமர்ப்பித்தது. போதிய நிதி வசதி இல்லை என மாநகராட்சி வாதாடியது – தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA5D**

6276–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — ($2 \times 12 = 24$ marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "All labour legislations are social security legislations" – Discuss.

   "தொழிலாளர் சட்டங்கள் அனைத்தும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களே" – விவாதிக்க.

2. Explain the Constitution, powers and duties of the Employee's State Insurance Corporation, Standing Committee and the Medical Benefit Council under the Employee's State Insurance Act, 1948.

   1948-ன் தொழிலாளர் அரசு காப்பீட்டு சட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம், நிலைக் குழு மற்றும் மருத்துவ நலக் குழு ஆகியவற்றின் அமைப்பு முறை, அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.

3. Explain the provisions of the Factories Act, 1948 relating to health and welfare of the workers.

   1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் நலவாழ்வு குறித்த வகையங்களை விவரிக்க.

PART B — ($2 \times 7 = 14$ marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the salient features of the Maternity Benefit Act, 1961.

   மகப்பேறுக்கால சலுகைகள் சட்டம் 1961, சிறப்பு அம்சங்களை விவாதிக்க.

5. Explain the liability of an employer to pay compensation under the Employee's Compensation Act, 1923.

   தொழிலாளர் இழப்பீட்டு சட்டம், 1923-ன் கீழ் இழப்பீடுத் தொகை குறித்து முதலாளியின் பொறுப்பு நிலையினை விளக்குக.

6. Explain various kinds of bonuses and state the extent and eligibility of bonus under the Payment of Bonus Act, 1965.

மீதூதியத்தின் வகைகளை விளக்கி, 1965-ஆம் ஆண்டு மீதூதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் மீதூதியம் பெறுவதற்கான அளாவுகை மற்றும் தகுதியினை எடுத்துரைக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Dependents.

சார்ந்திருப்பவர்கள்.

(b) Sickness Benefit.

நோய்கால பலன்.

(c) Full Bench Formula.

முழு நீதிப்பேராய தீர்வை.

(d) Deposit Linked Insurance Scheme, 1976.

வருங்கால வைப்புத் தொகையுடன் இணைந்த காப்பீட்டுத் திட்டம், 1976.

(e) Continuous Service.

தொடர்ச்சியான பணி.

(f) Controlling Authority.

கட்டுப்படுத்தும் அதிகாரி.

(g) Occupier of a factory.

தொழிற்சாலை பொறுப்பாட்சியாளர்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Santhosh, a heart patient, was employed as an electrician in a factory. Because of short circuit, fire broke out in the factory. To put out the fire, he ran up the stairs to disconnect the electrical main connections. During the process, he collapsed and died of heart failure. Decide whether his dependents can claim compensation?

இதய நோயாளியான சந்தோஷ் என்பவர் எலக்ட்ரீஷியனாக தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தார். தொழிற்சாலையில் ஏற்பட்ட மின் கசிவினால் நெருப்பு பிடித்து விட்டது. நெருப்பை அணைக்கும் முயற்சியில் சந்தோஷ் படிக்கட்டுகளில் ஏறி மின்சார முக்கிய இணைப்பை துண்டிக்க சென்றார். அப்போது இதய கோளாறு ஏற்பட்டு இறந்து விடுகிறார். அவரை சார்ந்திருப்பவர்கள் இழப்பீடு பெற முடியுமா?

9. A notice of dismissal was given by the employer to Thangaraj during the period when he was in receipt of disablement benefit under the ESI Act, 1948. Discuss the effect of the notice of dismissal given by the employer.

தங்கராஜ் என்ற தொழிலாளி, 1948-ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தகுதியிழப்பு பலன்களை பெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் முதலாளி பணி நீக்க அறிவிப்பு கொடுக்கிறார். இந்த அறிவிப்பின் செயல்திறனை விளக்குக.

10. In a shop, employee is allowed to work eight hours in a day. How much time, he is entitled to interval under the Tamil Nadu Shops and Establishments Act, 1947?

ஒரு தொழிலாளி நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் கடை ஒன்றில் வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறார். 1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி எவ்வளவு காலம் இடைவேளை பெற தகுதியுடையவர்?

———————

Register No. | | | | | | | | |

**TA5E**

6277–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the provisions of the Income Tax Act, 1961, relating to set-off and carry forward rule.

இழப்புகளை ஈடு செய்தல் மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்லுதல் குறித்த வருமான வரிச் சட்டம், 1961-ன் வகையங்களை எடுத்துக் கூறுக.

2. Explain the provisions of Customs Act, 1963 relating to the determination of duty where imported goods consist of articles liable to different rates of duty.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் வெவ்வேறு வரி விகிதங்களுக்கு பொறுப்பான பொருட்களை கொண்டிருக்கும் பொழுது 1963-ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் கீழ் வரி நிர்ணயிப்பதனை விளக்கவும்.

3. Relate fundamental rights with taxing statutes in relevance with Article 265 with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் சரத்து 265 உடன் பொருந்தக்கூடிய வரி விதிப்புச் சட்டங்களுடன் அடிப்படை உரிமைகளை தொடர்புபடுத்துங்கள்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Give an account of various authorities, their powers and functions under the Income Tax Act, 1961.

வருமான வரிச்சட்டம் 1961-ன் கீழ் வரும் பல்வேறு அலுவலர்கள் அவர்களது அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்குக.

5. Explain the income from house property with permissible deductions.

வீட்டு சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் அனுமதிக்கக் கூடிய கழிவுகளை விளக்குக.

6. What is Input Tax Credit (ITC)? What are the conditions which are required to be fulfilled for claiming ITC?

செலுத்தப்பட்ட வரி வரவு என்றால் என்ன? செலுத்தப்பட்ட வரி வரவு கோர வேண்டுமெனில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Pension

ஓய்வூதியம்

(b) Best Judgement Assessment

நன்கணிப்பு வரிவிதிப்பு

(c) Non-resident of India under the Income Tax Act, 1961.

1961-ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தில் குடியிருப்புக் கொண்டிரா இந்தியன்

(d) Allowances

படிகள்

(e) GST Council

சரக்கு மற்றும் சேவை வரிக் குழு

(f) Explain about Search, Seizure and arrest demands under CGST Act, 2017.

CGST சட்டம் 2017-ன் கீழ் தேடுதல், பறிமுதல் மற்றும் கைது கோரிக்கைகள் பற்றி விளக்கவும்.

(g) Zero Rated Supply.

பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட வழங்கல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law. Give cogent reasons :

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. Mr. Arputham is aged about 58 years. His annual income for the previous year 2023-2024 is Rs.15,00,000. Compute the tax liability of Mr. Arputham, for the assessment year 2024-2025.

Mr. அற்புதம் 58 வயது உடையவர். அவரின் ஆண்டு வருமானம், முந்தைய ஆண்டு 2023-2024–ல், ரூபாய் 15,00,000. திரு. அற்புதம் அவர்களின் வரி செலுத்தும் தொகையை மதிப்பீட்டு ஆண்டு 2024-2025-க்கு கணக்கிடுக.

9. Mrs. Saloni Tiwari is working as a world-class spy at National Intelligence Agency in Mumbai. Her monthly income and deductions are as follows during the previous year 2023-2024.

| Income | | Deductions | |
|---|---|---|---|
| | Rs. | | Rs. |
| Basic pay | 60,000 | C.P.S. | 6,200 |
| D.A. | 22,000 | S.P.F. | 1,000 |
| H.R.A. | 8,000 | | |
| M.A. | 800 | | |
| T.A. | 4,824 | | |
| | 95,624 | | 7,200 |

She pays a house rent of Rs.12,000 per month. She pays Rs.8,000 per month towards Postal Life Insurance. Calculate the tax liability of Mrs. Saloni Tiwari for the assessment year 2024-2025.

திருமதி. சலோனி திவாரி, தேசீய புலனாய்வு நிறுவனத்தில் புலனாய்வு நிபுனராக மும்பையில் பணியாற்றி வருகிறார். அவருடைய வருமானம் மற்றும் பிடித்தம் பின்வருமாறு

| வருமானம் | | பிடித்தம் | |
|---|---|---|---|
| | ரூபாய் | | ரூபாய் |
| அடிப்படை சம்பளம் | 60,000 | ஓய்வூதிய திட்டம் | 6,200 |
| அகவிலைப்படி | 22,000 | சிறப்பு சேமநல திட்டம் | 1,000 |
| வீட்டு வாடகைப் படித்தொகை | 8,000 | | |
| மருத்துவப்படி | 800 | | |
| பயணப்படி | 4,824 | | |
| | 95,624 | | 7,200 |

அவர் வீட்டு வாடகையாக மாதம் ரூ.12,000 செலுத்துகிறார். அஞ்சல் ஆயூள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 8,000 மாதம் செலுத்துகிறார். திருமதி. சலோனி திவாரி வரிவதிப்பு ஆண்டு 2024-2025-ல் செலுத்தவேண்டிய வரித் தொகையினை கணக்கிடுக.

10. Mrs. Suchitra sold goods to Mr. Talpade worth Rs.10,00,000. The invoice was issued on January 20, 2023. The payment was received on January 28, 2023. The goods were supplied on January 25, 2023. Determine the time of supply of goods.

திருமதி. சுசித்திரா என்பவர் திரு. தல்பாடிக்கு ரூபாய் 10,00,000 மதிப்புள்ள சரக்குகளை விற்கிறார். 20.01.2023-ல் சரக்குகளின் விலைப் பட்டியல் வழங்கப்பட்டது. சரக்குக்கான தொகை 28.01.2023-ல் பெறப்பட்டது. 25.01.2023-ல் சரக்கு அளிக்கப்பட்டது, சரக்குகளின் அளிப்பு நடக்கும் நேரத்தை நிர்ணயிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA5G** **6321–24**

(For the candidates admitted from 2022–2023 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA, 2023.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss in detail the various provisions relating to arrest of persons as provided under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023-ன் கீழ் நபர்களின் கைது தொடர்பாக கூறப்பட்டுள்ள பல்வேறு வகையங்களை பற்றி விரிவாக விளக்கவும்.

2. Discuss about the jurisdiction of criminal courts in inquiries and trials.

   விசாரணை மற்றும் வழக்கு விசாரணைகளில் குற்றவியல் நீதிமன்றத்திற்கான அதிகாரவரம்பினைப் பற்றி விளக்கவும்.

3. Describe about the trial before court of session.

   அமர்வு நீதிமன்றத்திற்கு முன் நடக்கும் வழக்கு விசாரணையைப் பற்றி விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the term "Judgment". What are the essential particulars of a Judgment? Can a Judgment be altered after its pronouncement?

   "தீர்ப்பு" என்ற பதத்தினை விளக்குக. தீர்ப்பு ஒன்றில் அடங்கி இருக்க வேண்டிய முக்கிய ஆக்கக் கூறுகள் என்ன? தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், அதனை மாற்ற முடியுமா?

5. Write a note on transfer of criminal cases.

குற்றவியல் வழக்குகளை மாற்றுதல் தொடர்பாக குறிப்பு வரைக.

6. Differentiate compliant and FIR.

புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை வேறுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Bailable offence

பிணையத்தில் விடக்கூடிய குற்றம்

(b) Case Diary

வழக்கு நாட்குறிப்பேடு

(c) Habitual offender

வழக்கமான குற்றவாளி

(d) Discharge

குற்ற விடுவிப்பு

(e) Inquest report

இறப்பு ஆய்வு அறிக்கை

(f) Anticipatory bail

முன் ஜாமீன்

(g) Summons

அழைப்பாணை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', an accused sought the transfer of his case from one sessions court to another sessions court on the ground that judge is biased. Advise him.

'அ' என்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர் வழக்கினை ஒரு அமர்வு நீதிமன்றத்திலிருந்து வேறொரு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றிட கோருகிறார். ஏனெனில் தற்போதைய அமர்வு நீதிபதி ஒரு தலைபட்சமாக உள்ளார் என்ற காரணத்தால் மாற்ற கோருகிறார். அறிவுரை கூறுக.

9. 'A' is tried for the offence of Dacoity. 'A', wants to compound the offence. Discuss.

அ என்பவர் கூட்டுக்கொள்ளை குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார். அவர் இக்குற்றத்தை சட்டப்படி சமரசம் செய்து தீர்த்துக் கொள்ள விரும்புகிறார். விவாதிக்க.

10. 'A' is an accused of an offence and he is subjected to Narco-Analysis or Polygraph Test by the police. Decide the constitutional validity of such test.

'அ' என்பவர் ஒரு குற்றத்திற்காக குற்றம் சுமத்தப்படுகிறார். மற்றும் அவர் காவல்துறையினரால் உண்மையைக் கண்டறியும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார். அச்சோதனையின் அரசமைப்புச் செல்லுந்தன்மையினை தீர்மானிக்க.

---